(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE | 23 PTM 102 |

REG.NO

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2023**

**எம்.ஏ.-தமிழ் இலக்கியம்** — **மதிப்பெண்கள் : 75**

**முதல் பருவம்** — **நேரம் : 3 மணி**

# தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. தொல்காப்பியம் யாருடைய அவையில் அரங்கேற்றப்பட்டது?

   அ) சேரர் ஆ) பாண்டியர் இ) பல்லவர் ஈ) சோழர்

2. எவையிரண்டும் சேர்ந்தால் ஔகாரம் பிறக்கும்?

   அ) இ, ய ஆ) அ, இ இ) அ, உ ஈ) ர, ழ

3. சொற்கள் புணரும் போது எத்தனை வகையான மாற்றங்களை அடைகின்றன?

   அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 6

4. ‘அழன்’ – எச்சாரியை பெறும்?

   அ) அன் ஆ) ஒன் இ) வற்று ஈ) அத்து

5. வேப்பங்கிளை என்பது எவ்வகைப் பெயர்?

   அ) மரப்பெயர் ஆ) சுவைப்பெயர் இ) அளவுப்பெயர் ஈ) முறைப்பெயர்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. உயிர் மெய் ஒலிக்கும் முறை யாது?
7. உயிரெழுத்துகளுள் ஓரெழுத்து ஒருமொழி உள்ளனவா? குறிப்பிடுக.
8. அளவுப்பெயர்க்குச் சான்று தருக.
9. புளி என்பது எத்தன்மைப் பெயர்? சான்று தருக.
10. எகின் + கால் - எவ்வாறு புணரும்?

**பகுதி – ஆ** **( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) உயிர்மெய் எழுத்துகளின் வரிவடிவத்தை விளக்குக.

**(அல்லது)**

ஆ) எழுத்துகளின் பெயர்ப்பாகுபாடு குறித்தெழுதுக. **(த.பி.பா.)**

***ETHICAL PAPER***

12. அ) மொழிக்கு முதலாகும் எழுத்துகளைக் கூறுக.

**(அல்லது)**

ஆ) எழுத்துகளின் பொதுப் பிறப்பினை எடுத்துரைக்கவும்.

13. அ) சாரியை குறித்தெழுதுக.

**(அல்லது)**

ஆ) அளவு, நிறை, எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியில் ஏகாரம் பெறுதலை விளக்குக.

14. அ) தாம், நாம் எனும் நெடு முதல் குறுகும் மொழிகள், உருபோடு புணரும் முறையை எழுதுக.

**(அல்லது)**

ஆ) பல, சில - சொற்புணர்ச்சியை உயிர் மயங்கியல் எங்ஙனம் சுட்டுகிறது?

15. அ) னகர ஈற்றுச் சொற்களுள் வயின், குயின் ஆகியவற்றை விளக்குக.

**(அல்லது)**

ஆ) திசைப்பெயரோடு திசைப்பெயர் புணர்தலைச் சான்றுடன் விளக்குக.

**பகுதி – இ ( 5 x 8 = 40 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4/K5 )**

16. அ) எழுத்துகளின் பெயர், தொகை, மாத்திரை அளவு குறித்துக் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) மெய்ம்மயக்கங்கள் குறித்து நூன்மரபு கூறுவனவற்றை விவரி.

17. அ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளை வகுத்துரைக்கவும்.

**(அல்லது)**

ஆ) மெய்யெழுத்துகள் பிறக்கும் முறையை ஆய்க.

18. அ) எழுத்து வகை, சொல் வகையால் அமையும் புணர்ச்சியைப் புணரியல் எவ்வாறு விளக்குகின்றது? **(அல்லது)**

ஆ) இரண்டாம் வேற்றுமைத் திரிபுகளைத் தொகைமரபு எவ்வகையில் விரித்துரைக்கின்றது?

19. அ) சாரியைகளின் புணர்ச்சி நிலைகளை உருபியல் வழியாக எடுத்தியம்புக.

**(அல்லது)**

ஆ) அகர ஈற்றச் சொற்களின் புணர்ச்சியை உயிர் மயங்கியல் வழியாகத் தெளிவுறுத்துக.

20. அ) மகர ஈற்றுச் சொற்கள் புணரும் முறையைப் புள்ளிமயங்கியல் எவ்வாறு தொகுத்துரைக்கிறது? **(அல்லது)**

ஆ) எண்ணுப்பெயர் முன் அளவு, நிறைப்பெயர் புணரும் தன்மையை ஆய்க.



*****************